Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 23 2025

புதன்கிழமை 23, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 289 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# வெலிக்கடை புதைக்குழி எங்கே?



## விசாரணைகளை கோருகிறார் செல்வம் எம்.பி.

1983ஆம் ஆண்டு இதே மாதம் வெலிக்கடை சிறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் அரசு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் அவர்கள் புதைக்கப்பட்ட புதைக்குழி எங்கே உள்ளதெனவும் அரசு கண்டுபிடிக்க வேண்டுமெனத் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) அன்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் பேசுகையில், இந்த மாதம் ஜூலை மாதம் வெலிக்கடை சிறையில் எம்மவர்கள் படுகொலை செய்யப்பட்ட மாதம். தமிழினத்தின் விடுதலைக்காக, உரிமைக்காக முதலில் ஆயுதம் எடுத்துப் போராடிய தலைவர் தங்கதுரை, குட்டிமணி போன்றோர் பருத்தித்துறை மணற்காடு கடற்கரையில் 1981 சித்திரை மாதம் 5ஆம் திகதி இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டார்கள். 1983 ஜூலை மாதம் 25,27ஆம் திகதிகளில் தமிழ் அரசியல் கைதிகள், பொதுமக்கள் என 53 பேர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்தப் படுகொலைக்கு பொலிஸ், சிறை அதிகரிக்க எல்லோரும் உடந்தையாக இருந்தார்கள். குட்டிமணி உட்பட பலரின் கண்கள் பிடுங்கப்பட்டன. இரண்டு நாட்களாகி இந்த படுகொலைகள் இடம்பெற்ற சூழலில் தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, ஜெகன், நடேசதாசன், தேவன், சிவபாதம், ஸ்ரீகுமார், மரியாம்பிள்ளை, குமார், குமாரகுலசிங்கம் மற்றும் டொக்டர் ராஜசுந்தரம் உட்பட 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

அனைத்து குற்றச்சாட்டுகளிலும்

## தென்னக்கோன் குற்றவாளி



பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்திய பாராளுமன்ற விசாரணைக் குழு, அவரை அனைத்து குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளியாகக் கண்டறிந்து, அவரை பதவியில் இருந்து நீக்குவதற்கு பரிந்துரை செய்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ர மரத்ன பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பொலிஸ்மா

தொடர்ச்சி P2

தனியார் துறை ஊழியர்களின் ஆகக் குறைந்த

## அப்படை சம்பளம் ரூ.30,000 ஆக அதிகரிப்பு




தனியார் துறை ஊழியர்களின் ஆகக் குறைந்த அடிப்படை சம்பளமாக இருந்த 17,500 ரூபாவை கடந்த ஏப்ரல் மாதம் முதல் 27,000 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அந்த தொகை 30,000 ரூபாவாக அதிகரிக்கப்படும் என்றும் தொழில் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்ணான்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) அன்று நடைபெற்ற வேலையாட்சகளின் வரவு-செலவுத் திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் குறைந்தபட்ச வேதனம் தொடர்பான (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## பிரதம நீதியரசர் பத்மன் சூரசேன



அடுத்த பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் ப்ரீதி பத்மன் சூரசேனவின் பெயரை, அரசியலமைப்பு சபைக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க. பரிந்துரைத்துள்ளார்.

ஜனாதிபதியின் பரிந்துரை குறித்து இறுதி முடிவை எடுக்க அரசியலமைப்பு சபை புதன்கிழமை (23) அன்று கூடவுள்ளது.

பிரதம நீதியரசரான முர்து பெர்னாண்டோ 27ஆம் திகதி ஓய்வு பெறுகிறார். அவர் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றத்தில் தனது பிரியாவிடை உரையை நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ச்சி P2

## சலுகைக் குறைப்பு வரைவுக்கு அங்கீகாரம்



முன்னாள் ஜனாதிபதிகள், அவர்களது குடும்பங்கள் மற்றும் ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு சலுகைகளை குறைக்கும் நோக்கில், 1986ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஜனாதிபதி உரிமைச் சட்டத்தைத் திருத்துவதற்கான வரைவு சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தொடர்ச்சி P2

## "வாயைக் கொடுத்து வாங்கிக் கொள்ளாதீர்"



வெள்ளை வேன் கடத்தல்காரர்களையும் படுகொலையாளிகளையும் பாதுகாத்தவர்கள் ராஜபக்ஷக்கள். எனவே, எம்மிடம் வாய் கொடுத்து வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டாம் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க நாமல் ராஜபக்ஷவை எச்சரித்தார்.

தொடர்ச்சி P2



பெருந்தோட்ட தொழிலாளர்களின்

## "சம்பளத்தையும் அதிகரிக்கவும்"

ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் 27,000 ரூபாவாக அதிகரிக்கப்படுவது போன்றே பெருந்தோட்ட மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கமைய 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(22)

தொடர்ச்சி P2

## "தமிழ் மக்களுக்கு அனுர மீது சந்தேகம்"



தமிழர்களின் இனப் பரம்பலை மாற்றியமைக்க தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் செய்த அதே செயற்பாட்டை அனுரகுமார அரசும் செய்கின்றதோ என்ற சந்தேகம் எங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது என தமிழரசு கட்சியின் எம்.பியான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) அன்று இடம்பெற்ற வேலையாட்களின் வரவு-செலவுத் திட்ட நிவாரணப்படி, திருத்த சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் தேசிய குறைந்த பட்ச வேதன திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில்

தொடர்ச்சி P2

## "மஹர பள்ளிவாசல் மீண்டும் திறக்கப்படாது"



மஹர சிறைச்சாலை வளவில் காணப்படும் பள்ளிவாசலுக்கு வெளியார் வருவதால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. எனவே அந்த பள்ளிவாசலை மீண்டும் திறக்க அனுமதிக்கப்படாது என நீதி,சிறைச்சாலைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) அன்று இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பியான மரிக்கார் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

பொலிஸ் நிலையங்களில்

## வட்டுக்கோட்டை கொலைக் களமா?

### போராட்டத்தில் குதித்த மக்கள்

நிதர்ஷன் வினோத்



வட்டுக்கோட்டை பொலிஸாரின் அடாவடியான செயற்பாடுகளுக்கும், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் நீதி வேண்டி மூளாய் - நேரம் பகுதி மக்கள் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் செவ்வாய்க்கிழமை (22) அன்று ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

1,600 ரூபாய் அதிகரிப்பு கோரிக்கை

## ஏமாற்று வித்தை



தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக, எதிர்க்கட்சியினர் பலரும் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.எம்.பி க்கள் இருவர் கையொப்பமிட்டு ஆகக் குறைந்த சம்பளம் 1,600 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என திருத்தம் ஒன்றை முன் வைத்துள்ளனர். இது ஒரு ஏமாற்று வித்தை என்று பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வெலிக்கடை புதைக்குழி எங்கே?

எனவே, 1983ஆம் ஆண்டு இதே மாதம் வெலிக்கடை சிறையில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் அரசு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் அவர்கள் புதைக்கப்பட்ட புதைகுழி எங்கே உள்ளது என்பதையும் அரசு கண்டுபிடிக்க வேண்டும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை அரசு விசாரிப்பது போன்று இந்த வெலிக்கடை படுகொலைகளையும் விசாரணை செய்ய வேண்டும் என்றார்.

## சலுகைக் குறைப்பு...

ஜனாதிபதிகளின் உரிமைச் சட்டம் மற்றும் 1977ஆம் ஆண்டின் பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டம் இல.1 ஆகியவற்றை இரத்து செய்யும் சட்டத்தை வரைவதற்கான கடந்த மாத அமைச்சரவை முடிவைத் தொடர்ந்து இது நடைபெற்றது.

இந்த நடவடிக்கை அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சி நிரலான "வளமான நாடு அழகான வாழ்க்கை" இன் ஒரு பகுதியாகும், இது போன்ற உரிமைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த சீர்திருத்தத்தை ஆதரிக்கும் இரண்டு வரைவு சட்டமூலங்களைத் தயாரிக்க சட்ட வரைஞருக்கு அறிவுறுத்துவதற்கான நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சரின் முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

வாராந்திர அமைச்சரவை சந்திப்பில் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, "உரிமைகளைக் குறைப்பதற்கான முன்மொழியப்பட்ட திருத்தம் எந்தவொரு தனிப்பட்ட முன்னாள் ஜனாதிபதியையும் இலக்காகக் கொண்டிருக்கவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதிகள் உட்பட அனைத்து குடிமக்களின் பாதுகாப்பிற்கும் அரசாங்கம் பொறுப்பு. முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பாக நீதிமன்ற தீர்ப்பும் உள்ளது, மேலும் சட்டத்தை உருவாக்கும் போது இந்த காரணிகள் அனைத்தும் கருத்தில் கொள்ளப்பட்டன" என்று அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

1986ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் கீழ் இயற்றப்பட்ட அசல் சட்டம், ஓய்வுபெறும் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகவும், வீட்டுவசதி மற்றும் பிற உரிமைகள் தொடர்பான தெளிவான விதிகளைக் கொண்டிருப்பதாகவும் புதிய சட்டமூலம் விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் ஜெயதிஸ்ஸ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## "தமிழ் மக்களுக்கு...

உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், எமது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டுமானால் முதலீடுகளை நாட்டுக்குள் வசதிகள் முக்கியம் .இந்திய அரசினால் 65 மில்லியன் டொலர் இலங்கை அரசுக்கு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தன. ஆனால் அது இழுத்தடிக்கப்படுகின்றன.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் வடக்கு மாகாணம் மட்டுமல்ல முழு நாடும் தன்னுடைய வருமானத்தை அதிகரிக்க கூடிய பொருளாதாரத்தை வலுப்படுத்த கூடிய நிலைமை தானாக வரும்போது அதை நாம் நழுவ விட்டுக் கொண்டிருக்கின்றோம்.

வவுனியாவில் உள்ள 4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வெடிவைத்த கல் கிராம சேவையாளர் பிரிவில் இருக்கின்ற மக்கள் வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவந்து குடியேற்றப்பட்ட பெரும்பான்மையின் மக்களோடு ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக படுகொலைகள் நடந்ததன் காரணமாக, 1983ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறியிருந்தனர். அவர்கள் இந்த யுத்தம் முடிந்த பின்னர் தங்களின் சொந்தக் காணிகளுக்கு செல்வதற்கு முயற்சி எடுத்தபோது, 2019ஆம் ஆண்டு திரிவைத்த குளத்திற்கு கீழிருக்கும் 150 ஏக்கர் வயல் பிரதேசத்தைத் திருத்தம் செய்து தாம் மீண்டும் அங்கு தொழிலை செய்வதற்கு முற்பட்டவேளை வனவளத்துறை அந்த மக்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து 5 வருடங்களுக்குப் பின்னர் 2024 ஆம் ஆண்டு அந்த வழக்கு அடிப்படையான எந்த ஆதாரமும் இல்லாத வழக்கு என தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அங்குள்ள விவசாயிகள் அந்த வயல்களுக்கு செல்லக்கூடாது என்று கட்டளை இடப்பட்டிருந்தது. இதனால் அந்த வயல் பகுதிகளுக்கு செல்லாதிருந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அங்கு குடியேற்றப்பட்ட அயல் கிராம மக்களுக்கு எந்த ஒரு அனுமதியும் பெறாது குத்தகை அடிப்படையில் இந்தக் காணிகளை வழங்கியுள்ளனர். அந்த காணிகளை அவர்கள் சட்டத்திற்குப் புறம்பான வகையில் அந்தரவெவ கமக்காரர் அமைப்பு என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அங்கிருந்த அரச உத்தியோகஸ்தர்களும் உடந்தையாக இருக்கின்றனர். இப்போது அங்கிருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், இந்த 150 ஏக்கருக்கு மேலதிகமாக கடந்த ஒரு மாத காலமாக கிட்டத்தட்ட 400-500 ஏக்கர் அடர்ந்த வனப்பகுதி அங்கு குடியேற்றப்பட்ட மக்களினால் துப்புரவு செய்யப்பட்டு கொண்டு இருக்கிறது. பொலிஸாரும் வனவளத் திணைக்களமும் இது தொடர்பில் தங்களுக்குத் தெரியாது என்கின்றனர் என்றார்.

## ஏமாற்று வித்தை

உண்மையில் இதன் மூலம் எதையும் செய்ய முடியாது என்பதை தெரிந்து கொண்டே மீண்டும் ஏமாற்றுகின்றார்கள். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் 2027 செப்டம்பர் மாதமே நிறைவு பெறுகிறது எனினும் அதற்கு முன் நாம் முதலாளிமார் சம்மேளனம் மற்றும் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சம்பள அதிகரிப்புக்கு வழி வகுப்போம் என்றார்.

பாராளுமன்ற த்தில் செவ்வாய்க்கிழமை(22) நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் துறை சம்பளம் தொடர்பில் சட்டம் நிறைவேற்றப்பட்ட சட்டம் எப்போதோ கொண்டுவரப்பட வேண்டியது. முற்போக்கு முன்னணி தொழிற்சங்கங்கள் அதை செய்யவில்லை. சிலர் நீதிமன்றத்திற்கு சென்றனர். எவ்வாறெனினும், இன்றைய தினம் இந்த நாட்டின் உழைக்கும் தொழிலாளர்களுக்கு முக்கியமான தினம். 17,500 ரூபாவில் இருந்து 30,000 ரூபாய் வரை தனியார் துறையினரின் சம்பளம் அதிகரிக்கப்படுகிறது. இப்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் பலரும் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். இதுவரை காலமும் யார் நாட்டை ஆட்சி செய்தார்கள்? 2024 ஒன்பதாம் மாதம் 10ஆம் திகதி தான் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை எதிர்க்கட்சியில் உள்ள அனைவரும் அறிவர். தொழிற்சங்கத்தினர் உட்பட எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் மூன்று வருடங்களுக்கு சம்பள அதிகரிப்பு தொடர்பான இணக்கத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர். அந்த கூட்டு ஒப்பந்தம் 2027 செப்டெம்பர் மாதத்திலேயே நிறைவு பெறுகிறது. எனினும், நாம் முதலாளிமார் சம்மேளனம் மற்றும் தொழிற்சங்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுக்க முயற்சி எடுப்போம் என்றார்.

## "வாயைக்...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) அன்று நடைபெற்ற விவாதத்தில் தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க உரையாற்றிக் கொண்டிருந்த போது, ராதாகிருஷ்ணன் எம்.பி. ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

அதை பெரிதாக செவிமடுக்காத தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்ஹ, சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ, தயாசிறி ஜயசேகர, நீங்கள் எல்லோரும் கொழும்பு மாநகர சபை ஆட்சியை கைப்பற்ற ஒன்றிணைந்தீர்கள். ஊடக் சந்திப்புகளை நடத்தினீர்கள். எதிர்கால நண்பர்களாகினீர்கள் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாமல் ராஜபக்ஷ எம்.பி. ஏன் நீங்களும் எமது நண்பர் தான் என்றார்.

இதனால் கோபமடைந்த தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, நீங்கள் நல்லவர்களா? தாஜுதீனைக் கொன்றவர்கள். படுகொலையாளிகள், வெள்ளை வேன் கடத்தல்காரர்களை பாதுகாத்தவர்கள். உங்கள் தந்தை எத்தனை பேரை வேட்டையாடினர். சரத் பொன்சேகாவை என்ன செய்தீர்கள்? உங்களை எதிர்ப்பவர்களை இருக்க விட்டீர்களா?ஆகவே என்னிடம் வாய் கொடுத்து வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டாம் என்றார்.

## "சம்பளத்தையும்...

நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் இடையீட்டுக் கேள்வி ஒன்றை எழுப்பியே இவ்வாறு வலியுறுத்தினார்.

வேலையாட்களுக்கான குறைந்தபட்ச சம்பளத்தை டிசெம்பர் வரை 27,000 ரூபாய் வரையிலும், ஜனவரி மாதம் முதல் அதை 30,000 ரூபாவாக அதிகரிக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இது நல்லதொரு விஷயம் என்பதால் இதனை நாம் ஆதரிப்போம்

அரசாங்கம், 'வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற தனது கொள்கை அறிக்கையில் மலையகத் தோட்டங்களில் பணிபுரியும் சமூகத்தினரின் அன்றாட வேதனத்தை 1,700 ரூபாயாக அதிகரிப்போம் என வாக்குறுதி வழங்கி இருந்தபோதிலும், இன்று அந்த வாக்குறுதியை மறந்து விட்டுச் செயல்படுகிறது.

நாட்டில் குறிப்பிட்டதொரு வேலையாட்களுக்கு குறைந்தபட்ச வேதனம் டிசம்பர் வரை 27,000 ரூபாய் வரையிலும், ஜனவரி மாதம் முதல் .30,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்படும் போது மலையக பெருந்தோட்ட, தாழ் நில சிறு தோட்ட சமூகத்தை மறந்துவிட்டனர். தேயிலை, ரப்பர், தென்னம் தோட்டங்கள் மற்றும் சிறு ஏற்றுமதி பயிர்களில் ஈடுபட்டுள்ளவர்களும் காணப்படுகின்றனர். முறையான கணக்கெடுப்புக்கு ஏற்ப அரசாங்கம் தனது வாக்குறுதிகளில் மிகக் குறைந்த அளவை மாத்திரம் நிறைவேற்றியுள்ளது.

ஆனால், தோட்ட மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை நாம் அறிய விரும்புகிறோம். பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், இராதா கிருஷ்ணன் மற்றும் திகாம்பரம் ஆகியோர் பெருந்தோட்ட மக்களுக்கான அடிப்படை சம்பளம் 1,700 ரூபாய் என்ற வாக்குறுதியைச் செயற்படுத்தும் திருத்தம் ஒன்றை முன்வைப்பதனால், இதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தருமாறு கோருகின்றேன் என்றார்.

## "மஹர பள்ளிவாசல்...

மேலும், மஹர சிறைச்சாலை வளவில் காணப்பட்ட பள்ளிவாசலுக்கு சட்டவிரோதமான பாதைகள் ஊடாக வெளியாட்கள் நுழைந்தனர்.

இதன்போது, சிறையில் இருப்பவர்களுக்கு செல்போன்கள், போதைப் பொருட்கள் போன்றவை வீசப்பட்டன.

அதேநேரம், இஸ்லாமிய ஒருவர் இறக்கும் போதும் விவாக நிகழ்வுகளின் போதும் பலர் இந்த பள்ளிவாசலுக்கு வந்தனர். இதனால் அதிகாரிகள், கைதிகளினதும் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. அதனால் தான் அப்போதைய சிறைச்சாலை அத்தியட்சகரினால் பள்ளிவாசல் மூடப்பட்டது.

இந்த பள்ளிவாசலை மீண்டும் திறந்தாள் அதே பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மீண்டும் ஏற்படும். எனவே, பள்ளிவாசலை மீண்டும் திறக்க அனுமதிக்க முடியாது.

அதேவேளை, சிறைச்சாலைக்கு சொந்தமான 5 பேர்ச்சஸ் காணி அங்குள்ளது. தேவையானால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவாறு அந்தக் காணியை வழங்க நடவடிக்கை எடுப்போம். ஆனால் மஹர சிறைச்சாலை வளவினுள் காணப்படும் பள்ளிவாசலை மீண்டும் திறக்க அனுமதிக்கப்படாது என்றார்.

எனினும், அந்த பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்கு, காணியை கொள்வனவு செய்து, நிர்மாணிப்பதற்கு உதவிகளை வழங்குவதற்கு பலரும் முன்வந்துள்ளனர். ஆகையால், அதற்கான இயலுமையை பற்றி கலந்தாலோசித்து தீர்மானிக்கவும் என மரிக்கார் எம்.பி. ஆலோசனை வழங்கினார்.

## தென்னக்கோன்

அதிபர் தேசபந்து தென்னகோனை பதவியில் இருந்து நீக்குவது தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை சபாநாயகர் சபைக்கு செவ்வாய்க்கிழமை (22) அன்று அறிவித்தார்.

இதன்போதே பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என்று விசாரணைக் குழு ஒருமனதாக முடிவு செய்து, அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்க பரிந்துரைத்துள்ளது எனவும் அறிவித்ததுடன் இதேவேளை, குறித்த அறிக்கையை அச்சிட்டு பாராளுமன்ற இணையத்தளத்தில் வெளியிடவும் எம்.பி.க்களுக்கு மும்மொழிகளில் வழங்கவும் சபாநாயகர் அறிவுறுத்தினார்.

பொலிஸ்மா அதிபராகவிருந்த தேசபந்து தென்னகோனின் தவறான நடத்தை மற்றும் கடுமையான அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரித்து அறிக்கை தயாரிக்க கடந்த ஏப்ரல் மாதம் விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேன குழுவின் தலைவராக பணியாற்றினார்.

நீதிபதி நீல் இத்தவெல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏகநாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாகப் பணியாற்றினர். இந்த விசாரணைக் குழு 10 தடவைகளுக்கு மேல் கூடி, சாட்சியங்களைச் சேகரித்தது. மேலும், 2025 ஜூலை 16 முதல் தினமும் கூடி, சாட்சியங்களைப் பதிவு செய்யும் பணியை மேற்கொண்டது. இதன்படி, விசாரணைக் குழுவின் சாட்சியப் பதிவு பணிகள் சமீபத்தில் நிறைவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, குழுவின் அறிக்கை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலேயே சபாநாயகர் குழுவின் பரிந்துரையை சபைக்கு அறிவித்தார்.

## அப்படை சம்பளம்...

மேலும் அமைச்சர் தெரிவிக்கையில், 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அரச துறையினருக்கான சம்பள அதிகரிப்பு செய்யப்பட்டது. தனியார் துறையினரின் அடிப்படை சம்பளத்தை 30,000 ரூபாய் வரையில் அதிகரிக்க கலந்துரையாடினோம். இதன்படி, 27,000 ரூபாய் குறைந்த பட்ச சம்பளமாக ஏப்ரல் முதல் அமுலுக்கு வரும் வகையிலும், 2026 ஜனவரி முதலாம் திகதி முதல் அதனை 30,000 ரூபாய் வரையில் அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, 30,000 ரூபாய் என்பது தற்போதைய பணவீக்க நிலைமையில் போதுமானது அல்ல. சாதாரண வாழ்வுக்கு ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தொகை அவசியமாகும். எவ்வாறாயினும், பொருளாதாரத்தை நிலையாக்கி, உற்பத்திகளைப் பெருக்கியே அதனைச் செய்ய முடியும் என்றார்.

## பிரதம நீதியரசர்...

உயர் நீதிமன்றத்தின் மிக மூத்த நீதியரசர்களில் ஒருவரான ப்ரீதி பத்மன் சூரசேன, நீதித்துறை சேவை ஆணையத்தின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.

நாட்டில் பல உயர்மட்ட வழக்குகளில் நீதிபதியாகவும் சூரசேன பணியாற்றியுள்ளார். ஐஜிபி தேசபந்து தென்னகோனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் மூன்று பேர் கொண்ட பாராளுமன்றக் குழுவின் தலைவராகவும் அவர் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வட்டுக்கோட்டை...

இது குறித்து மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

மூளாயில் உள்ள மதுபான நிலையம் ஒன்றுக்குள் இடம்பெற்ற மோதல் சம்பவமே கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைக்கு காரணமாக அமைந்துள்ளது. மதுபான நிலையத்தில் வைத்து எமது பகுதியைச் சேர்ந்தவர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது எமது பகுதியைச் சேர்ந்த இன்னொருவர் எழுந்து ஏன் அவரை தாக்குகின்றீர்கள் என கேட்ட போது அவரையும் தாக்கி படுகாயம் ஏற்படுத்தினர். இதனால் தாக்குதலுக்கு உள்ளானவரின் மகன்கள் இருவர் மதுபான நிலையத்திற்கு கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டனர்.

பின்னர் காயமடைந்த எமது பகுதியைச் சேர்ந்த இருவரும் வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்று விட்டு வந்தபோது பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு பதிவு செய்வதற்குச் சென்றபோது பொலிஸார் முறைப்பாட்டைப் பதிவு செய்யவில்லை. ஆனால், தாக்குதல் நடத்திய ஒருவரைக் கைது செய்து வைத்திருந்தனர். தாக்குதல் நடத்திய மற்றவர்களையும் அழைத்து, எமது தரப்பினரையும் அழைத்து விசாரணை செய்யுமாறு நாங்கள் கோரினோம். ஆனால், பொலிஸ் அதை செய்யவில்லை. எங்களை பொலிஸ் நிலையத்தில் இருந்து விரட்டியடித்தனர்.

பின்னர் எமது பகுதியைச் சேர்ந்த ஒருவர் வேலை முடிந்து வரும் போது மற்றைய குழுவினர் பிடித்துச் சென்று அவர் மீது கொடூர தாக்குதல் நடத்தினர். பின்னர் நாங்கள் சம்பவம் அறிந்து சென்றபோது அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் அவரை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றவேளை ஏற்கனவே தாக்குதலுக்கு உள்ளானதால் அவர் பொலிஸ் நிலையத்தில் மயங்கி விழுந்தார். அவரை வைத்தியசாலைக்கு அனுப்புமாறு கோரிய வேளை பொலிஸார் தகாத வார்த்தையால் எம்மை திட்டி, எம்மையும் இப்படித்தான் தாங்கள் தாக்கி விட்டு உள்ளே தூக்கி போடுவோம் என கூறினர். பின்னர் நாங்கள்தான் நோயாளர் காவு வண்டியை அழைத்து அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம். மயங்கிய நபரை வைத்தியசாலைக்கு கூட கொண்டு செல்ல பொலிஸார் முன்வரவில்லை.

இதற்கு பின்னர்தான் ஞாயிற்றுக்கிழமை கலவரம் ஏற்பட்டது. அவர்கள் ஒரு குழுவாக இணைந்து எமது ஊருக்குள் தாக்குதல் நடத்துவதற்கு வரும்போதே எமது ஊர் மக்கள் இணைந்து அவர்களை விரட்டியடித்துவிட்டு கலவரத்தில் ஈடுபட்டனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரி வந்த பின்னர் பொலிஸ் காவலில் வைத்து ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டார்.

இ.மி.ச ஊழியர்களில்

# 50 சதவீதமானோர் ஆர்ப்பாட்டம்

இலங்கை மின்சார சபை ஊழியர்கள், இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக,செவ்வாய்க்கிழமை(22) பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

"அரசாங்கம் மின்சார சபையும் எமது ஊழியர்கள் அடிப்படை உரிமைகளை நீக்கிவிட்டது. தொழிலாளர்களுக்கு உரிய அடிப்படை வசதிகள் இல்லாமல் செய்து வருகின்றது" என்று குற்றஞ்சாட்டியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கை மின்சார சபை ஊழியர்களில் 50 சதவீதமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



வகுப்பறையில் மீட்கப்பட்ட

## 30 பாம்புக் குட்டிகள்; 55 பாம்பு முட்டைகள்

பாடசாலையின் ஆரம்ப பிரிவில் உள்ள வெளிப்புற வகுப்பறையில் இருந்து 30 பாம்புக் குட்டிகள், மூன்று வயது வந்த பாம்புகள் மற்றும் 55 பாம்பு முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள போகமுவ மத்திய கல்லூரியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதன்படி, அந்தப் பகுதியில் பாம்புகள் காணப்படுவதாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து வந்த புகாரைத் தொடர்ந்து, புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் மற்றும் ஊழியர்களால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

புதிய அதிபர் ஜூன் 27 அன்று கடமைகளைப் பொறுப்பேற்றதுடன் மற்றும் எச்சரிக்கைகளின் அடிப்படையில் ஒரு ஆய்வைத் தொடங்கியுள்ளார். இது கண்டுபிடிப்புக்கு வழிவகுத்தது.

போகமுவ மத்திய கல்லூரி தற்போது சுமார் 2,000 மாணவர்களுக்கு கல்வி கற்கின்றதுடன் இதில் 1 முதல் 13 ஆம் வகுப்பு வரை உள்ள ஆரம்பப் பிரிவில் மட்டும் 153 மாணவர்கள் உள்ளனர்.

பாடசாலை நிர்வாகத்தின் விரைவான நடவடிக்கை குழந்தைகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய உதவியது.

## ஹஷிஷுடன் கனேடிய பெண் சிக்கினார்

டீ.கே.ஜீ.கபில

சுமார் 18 கோடியே 10 இலட்சம் பெறுமதியுடைய 'ஹஷிஷ்' போதைப்பொருளை நாட்டிற்குள் கொண்டு வந்து, கட்டுநாயக்க விமான நிலையத்தின் 'கிரீன் சேனல்' வழியாக வெளியேற முயன்ற வெளிநாட்டுப் பெண் பயணி ஒருவர் சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை (22) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கனேடிய நாட்டைச் சேர்ந்த 37 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அவர், இந்த போதைப்பொருள் தொகையுடன் கனடாவின் மொண்ட்ரியலில் இருந்து கட்டாரின் தோஹா நகருக்கு வந்து அங்கிருந்து இலங்கை வந்துள்ளார்.

அவரின் பயணப் பைக்குள் இருந்து 18 கிலோ 123 கிராம் 'ஹஷிஷ்' போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஐஸுடன் கைது

ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு நீதிமன்றத்தினால் ஒரு திறந்த பிடியாணை உட்பட நான்கு பிடியாணைகள் பிறபிக்கப்பட்டு, தேடப்பட்டு வந்த நபர் காத்தான்குடி பொலிஸாரால் ஐஸ் போதைப்பொருளுடன் திங்கட்கிழமை(21) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி ஐந்தாம் குறிச்சி பெரிய மீரா பள்ளிவாசல் வீதியில் வைத்து 37 வயதுடைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 14 சிறிய பாக்கட்டுகள் கொண்ட 2250 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் நிறுவை இயந்திரம் உட்பட சில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன .



மேற்படி நபர் மட்டக்களப்பு நீதிமன்றத்தினால் நான்கு பிடிவாணைகள் பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்துள்ளதுடன் நீண்ட காலமாக தலைமறைவாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளார்.

சந்தேக நபரை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## அறிவோர் ஒன்றுகூடல்



அறிவோர் ஒன்று கூடல் நிகழ்ச்சி காரைக்கவி கந்தையா பத்மானந்தன் தலைமையில் புதன்கிழமை (23) மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற உள்ளதுடன், இதில் 'எழுதுங்கள் எழுத வரும்' எனும் தலைப்பில் 'கவிதை உறவு' இதழின் ஆசிரியர் 'கலைமாமணி' ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் உரையாற்றவுள்ளார்.

## பேனா கோடுகளால் 14 மாணவர்களுக்கு அரிப்பு

பியகம ஆரம்ப பாடசாலையில் நான்காம் (4-B) வகுப்பில் கல்வி கற்கும் 14 மாணவர்களுக்கு திடீரென ஏற்பட்ட அரிப்பு காரணமாக திங்கட்கிழமை (21) மதியம் பியகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எட்டு மாணவர்கள் மற்றும் ஆறு மாணவிகள் இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் நிலை கவலைக்கிடமாக இல்லை என கூறப்படுகிறது.

குறித்த வகுப்பைச் சேர்ந்த மாணவர் ஒருவர் பாடசாலைக்கு கொண்டு வந்த கார்பன் பேனாவால் தோழர்கள் மீது கோடு வரைந்துள்ளார், பின்னர் மாணவர்கள் அதை தண்ணீர் ஊற்றி கழுவிய பிறகு அரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பியகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆசிரியர் பற்றாக்குறையால் வீதிக்கு இறங்கிய பெற்றோர்

எஸ்.சதீஷ்

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோர்ட்டன் தெபட்டன் தமிழ் வித்தியாலயத்தில் நிரந்தர அதிபரை நியமித்து குறித்த பாடசாலைக்கான ஆசிரியர்களை பெற்று தருமாறு வலியுறுத்தி செவ்வாய்க்கிழமை(22) காலை பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நோர்ட்டன் தெபட்டன் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 01 தொடக்கம் தரம் 11 வரை 185 மாணவர்கள் கல்வி பயின்று வருவதுடன் 12 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருவதாக ஹட்டன் வலையகல்வி பணிப்பாளர் கூறுகின்ற போதும் பெற்றோர் பாடசாலைக்குச் சென்று பார்க்கும் போது தினமும் ஐந்து ஆசிரியர்கள் மாத்திரம் சமுகமளிக்கினறதாக பேற்றோர் தெரிவிக்கின்றனர்.

நிரந்தர அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் சுற்றிகாட்டியுள்ளதுடன் இது தொடர்பாக ஹட்டன் வலையகல்வி பணிமனையின் பணிப்பாளருக்கு கடிதம் வழங்கியுள்ள போதிலும் ஹட்டன் வலய கல்வி பணிமனை கண்டுகொள்ளவில்லை என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

முறையான அதிபர் இல்லாமலும் குறைந்த ஆசிரியர்கள் காணப்பட்ட போதிலும் இப் பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறு எடுத்துள்ளதாகவும் பாடசாலையில் காணப்படும் அதிபர், ஆசிரியர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்று தர வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இந்த விடயம் குறித்து ஹட்டன் வலையகல்வி பணிமனையின் பணிப்பாளர் ஆர்.விஜயந்திரனை தொடர்புகொள்ள முயற்சித்தபோது அது பயணிக்கவில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக மத்திய மாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் நிஹால் அபேகோனிடம் தொடர்பு கொண்டு வினவியபோது, "ஹட்டன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சில பாடசாலை களில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகிறது.

அந்த வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் அதிபர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமி ப்பதற்காக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், வெகுவிரைவில், தெபட்டன் தமிழ் வித்தியாலய த்திற்கு மாத்திரமல்ல அதிபர்கள் இல்லாத அனைத்து பாடசாலைகளுக்கும் அதிபர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட உள்ளது. தெபட்டன் தமிழ் வித்தியா லயத்தில் காணப்படும் ஆசிரி யர்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஹட்டன் வலய கல்வி பணிமனையின் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.



## முருகனுக்கு பட்டு

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய 2025ஆம் ஆண்டிற்கான உற்சவத்தின் முருகனுக்கு பட்டுக்கொணரும் திருவிழா திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(20) அன்று சிறப்பாக இடம்பெற்றது.

- வி.ரி.சகாதேவராஜா













# தெருக்களில் கைவிடப்பட்ட குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும்

ஒரு குழந்தை ஒரு சொத்து. அவர் ஒரு குடிசையிலோ, பெரிய வீட்டிலோ அல்லது தெரு மூலையிலோ பிறந்தாரா என்பது முக்கியமல்ல. சரியான வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியுடன், எந்தவொரு குழந்தையையும் சமூகத்திற்குப் பயனுள்ள நபராக மாற்ற முடியும். எந்தவொரு சூழ்நிலையிலும், இந்த வழியில் தெருக்களில் கைவிடப்படும் குழந்தைகள் சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழுவாக உள்ளனர். அவர்கள் மீது மிகுந்த உணர்திறன் கொண்டு செயல்படுவது பெரியவர்கள் மற்றும் அதிகாரிகளின் கடமையாகும்.

தெருவில் கைவிடப்பட்ட ஒரு சிறு குழந்தை தொடர்பான செய்தி, ஊடகங்களில் வந்தது. இதைப் பார்த்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மக்கள் பலருக்கு, குழந்தையைப் பராமரிக்க அனுமதிக்குமாறு கேட்டு தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தெருக்களில் குழந்தைகள் கைவிடப்படுவது நீண்ட காலமாக நடந்து வரும் ஒரு செயல்முறையாகும். இதன் காரணமாக, அரசாங்கமும் நன்னடத்தை துறையும் தெருக் குழந்தைகளைப் பராமரிக்க அனாதை இல்லங்களையும் அதற்கான அமைப்பையும் தயார் செய்ய வேண்டியிருந்தது.

நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் துறையின் அறிக்கைகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்ற கிட்டத்தட்ட நூறு சம்பவங்கள் பதிவாகின்றன. இது ஒரு சமூகப் பிரச்சினையாகவும் மனிதாபிமானப் பிரச்சினையாகவும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

பொருளாதார அழுத்தம், தந்தைவழி பிரச்சினைகள், மன சிக்கல்கள் போன்ற பல்வேறு காரணங்களால், குழந்தைகள் தெருக்களில் கைவிடப்படும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அத்தகைய குழந்தைகளுக்கு மகப்பேறு அல்லது தந்தைவழி உறுதிப்படுத்தல் தொடர்பாக பிறப்புச் சான்றிதழ்களை வழங்கும்போது சிக்கல்கள் எழுகின்றன. எதிர்காலத்தில் அவர்கள் சமூகத்தை எவ்வாறு எதிர்கொள்வார்கள் என்பதில் கடுமையான சமூகப் பிரச்சினை உள்ளது, எனவே, அவர்கள் எதிர்காலத்தில் சமூக ரீதியாக சங்கடமாக மாறுவதைத் தடுக்க வேண்டும்.

தெருக் குழந்தைகளின் நல்வாழ்வு மற்றும் வளர்ச்சியைத் தடுக்கும் பல சவால்கள் உள்ளன, மேலும் இந்தப் பிரச்சினைகளை சரியாகக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவது அவசியம். நிலையான குடும்ப அமைப்பு இல்லாததால் ஏற்படும் மனநலப் பிரச்சினைகள் ஒரு சமூகத் தீமையாக மாறுவதைத் தடுக்க நடவடிக்கைகளை வகுப்பது அவசியம். இந்தக் காரணத்திற்காக, அவர்களின் கல்வி மற்றும் மன ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பது முன்னுரிமைப் பட்டியலில் இருக்க வேண்டும்.

எளிதாகச் சொன்னால், இந்தத் தெருக் குழந்தைகள் மற்றும் தெருக்களில் கைவிடப்பட்ட குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பன்முக அணுகுமுறையை உருவாக்குவது அவசியம். இதற்கு, அனைத்து தரப்பினரின் ஆதரவும் தேவை. அரசாங்கம், பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சகம் மற்றும் நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் துறை ஆகியவை அதன் மிக முக்கியமான மற்றும் உன்னதமான பணியைச் செய்யும் நிறுவனங்களாக அடையாளம் காணப்படலாம். அதேபோல், முழு சமூக அமைப்பிலும் உள்ள அனைவரும் இதைப் புரிந்துகொண்டு பொதுவான சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# செம்மணி விடயத்தில் அனுர உறுதியாக இருப்பாரா?



ஏம்.எஸ்.எம்.ஐயூப்

பல தமிழ் இயக்கங்கள் அரச படைகளுக்கு எதிராகப் போராடி வந்த 1980களில் இருந்தே வடக்கு, கிழக்கில் கூட்டுக் கொலைகள் இடம்பெற்று வந்துள்ளன. 1984 செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி தமிழ் ஈழ விடுதலை அமைப்பினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கி பெரும் சேதத்தை விளைவித்ததை அடுத்து யாழ். நகரில் நூற்றுக் கணக்கான சாதாரண மக்கள் கொல்லப்பட்டனர்.

ஆனால், அந்நாட்களில் செய்தித் தணிக்கை கடுமையாக அமுலில் இருந்ததால் இவ்விபரங்கள் வெளியே வரவில்லை. அக்காலத்தில் பத்திரிகைகளும் அரச வானொலியும் மட்டுமே ஊடகங்களாக இருந்தன. தொலைக்காட்சி சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருந்த போதிலும், அது தென் பகுதியை மையமாகக்கொண்டு இயங்கியது. இணையத்தளங்கள் இருக்கவில்லை.

ஆயினும், சில தமிழ் பத்திரிகைகள் மறைமுகமாக அக்கொலைகளை அம்பலப்படுத்தின. ஒரு தமிழ் பத்திரிகை கொல்லப்பட்ட 'பயங்கரவாதிகளின்' விபரம் என ஒரு பட்டியலை வெளியிட்டது. அதில், கொல்லப்பட்டவர்களின் வயது விபரமும் வெளியிடப்பட்டு இருந்தது. அதன் மூலம் சிறுவர்களும் கொல்லப்பட்டு இருந்தமை தெரிய வந்தது. பயங்கரவாதிகள் யார் என்பதும் அம்பலமாகியது.

இப்போது செம்மணி மயானத்தில் கண்டெடுக்கப்படும் எலும்புக்கூடுகளிலும் சிறுவர்களின் எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன. இதுவும் சாதாரண பொது மக்கள் கொல்லப்பட்டமைக்கு மறுக்க முடியாத சான்றாகும்.

செம்மணியில் கண்டெடுக்கப்படும் மனித எச்சங்கள் யாருடையவை என்பதைப் பற்றி தெற்கில் சில அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டு இருக்கின்றனர். குறிப்பாக முன்னாள் கடற்படை அதிகாரியும் அமைச்சருமான சரத் வீரசேகர மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஆகியோர் விசித்திரமான கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

செம்மணியில் கண்டெடுக்கப்படும் எலும்புகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என்று அவர்களில் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். அதேவேளை, அவை இராணுவத்தினருடையதாக இருக்கலாம் என்றும் மற்றொரு கருத்தும் வெளியிடப்படுகிறது.

கடந்த மாத இறுதியில் மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, செம்மணிக்கும் சென்று அங்கு அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டார். அவரை அங்கு செல்ல அனுமதித்ததையிட்டு விமல் வீரவன்ச அரசாங்கத்தைக் குறை கூறியிருந்தார். இது அவர்களது வாதத்துக்கே முரணானதாகும். இந்த எலும்புகள் புலிகளால் கொல்லப்பட்டவர்களுடையவை என்றால், ஐ.நா. உயர்ஸ்தானிகர் அங்கு செல்வதை அவர்கள் ஏன் குறை கூற வேண்டும்?

செம்மணி 1990களில் இருந்தே அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற போரின்போது, பொது மக்கள் அதனை எவ்வாறு சந்தித்தார்கள் என்பதைப் பற்றி கதை சொல்லும் இடமாக இருக்கிறது. அக் காலத்தில் அங்கு இராணுவத்தின் சோதனைச் சாவடியொன்று இருந்தது. அந்த இடத்தில் தான் கிருசாந்தி குமாரசுவாமி என்ற பாடசாலை மாணவி, அவரது தாய், சகோதரன் மற்றும் அயலவர் ஒருவர் கடத்திக் கொல்லப்பட்டனர்.

அச்சம்பவம் தொடர்பான விசாரணையின் போது, தான் இந்த இடத்தில் சுமார் 600 பொது மக்கள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டனர் என்று சோமரத்ன ராஜபக்ஷ என்ற இராணுவ அதிகாரி கூறியிருந்தார். ஆயினும், அதன் பின்னர் அதைப் பற்றி பெரிதாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

1995இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது, யாழ். குடாநாடு ஏறத்தாழ முழுவதுமாக புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இந்த நிலையில், குடாநாட்டை புலிகளின் பிடியிலிருந்து மீட்பதற்காக அவ்வாண்டு இராணுவத்தினர் 'ரிவிரெச' என்ற படை நடவடிக்கையை மேற்கொண்டனர். அக்காலத்தில் குடாநாட்டைச் சேர்ந்த 500க்கும் 600க்கும் இடைப்பட்டோர் காணாமற் போனதாக சிறிது காலத்துக்குப் பின்னர் கூறப்பட்டது. அத்தகவலும் சோமரத்ன ராஜபக்ஷவின் சாட்சியமும் பொருத்தமாக இருக்கிறது.

இலங்கையில் செம்மணியில் மட்டும் கூட்டுக் கொலைகள் இடம்பெறவில்லை. அதேவேளை, அரச படைகள் மட்டும் தான் கூட்டுக் கொலைகளைச் செய்தார்கள் என்று கூறவும் முடியாது. இலங்கை இராணுவம், கடற்படை, விமானப் படை, இந்தியப் படைகள், புலிகள் மற்றும் முஸ்லிம் ஊர்காவல் படை ஆகிய அனைவரும் கூட்டுக் கொலைகளுக்காகக் கடந்த காலத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். அச்சம்பவங்களில் பலவற்றில் தடயங்கள் எதுவும் இது வரை கண்டு பிடிக்கப்படவில்லை.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் மக்கள் விடுதலை முன்னணியின் முதலாவது கிளர்ச்சியின் போதே கூட்டுக் கொலைகள் முதன் முதலில் இடம்பெற்றன. தெனியாய, கேகாலை போன்ற பல பிரதேசங்களில் இச்சம்பவங்கள் இடம்பெற்றன. அக்காலத்தில் மனித உரிமை அமைப்புக்களில் செயற்பாடுகள் மிகக் குறைந்ததாகவே இருந்தமையினால் சம்பவங்கள் இடம்பெற்ற இடங்கள் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியன அறிக்கையிடப்படவில்லை. ஆங்காங்கே 'டயர்' போட்டு சடலங்களை எரித்த கதைகள் மற்றும் ஆறுகளில் சடலங்கள் மிதந்த கதைகள் மட்டுமே கேட்கக் கூடியதாக இருந்தன.

பிரிவினைவாத போர் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முதலாவது கூட்டுக் கொலை 1984 செப்டெம்பர் 10ஆம் திகதி வவுனியா பிரதேசத்தில் பூவரசங்குளத்திலேயே இடம்பெற்றது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ்ஸொன்று ரம்பேவ என்னுமிடத்தில் வழிமறிக்கப்பட்டு பூவரசங்குளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பஸ்ஸில் பயணம் செய்த 47 பயணிகளில் 15 பேர் அவ்விடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தமிழ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இராணுவத்தினரையே அப்பத்திரிகைகள் மறைமுகமாக குற்றஞ்சாட்டியிருந்தன.

இதனையடுத்து, தமிழ் ஆயுத குழுக்களும் அதே ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி முதல் சாதாரண மக்களைத் தாக்கின. 1984ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் 'டொலர் பார்ம்' மற்றும் 'கென்ட் பார்ம்' என்ற இரண்டு பெரும்பான்மையின குடியேற்றங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 62 சாதாரண மக்கள் உள்ளிட்ட மொத்தம் 82 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் கூறப்பட்டது.

அடுத்த நாள் அதாவது டிசெம்பர் 1ஆம் திகதி அதே மாவட்டத்தில் கொக்குளாய் மற்றும் நாயாறு ஆகிய இரண்டு மீனவ கிராமங்கள் தாக்கப்பட்டு 11 பெரும்பான்மை இனத்தவர்கள் கொல்லப்பட்டனர். புலிகளே இந்தத் தாக்குதலையும் நடத்தியதாகக் கூறப்பட்டது. இதனையடுத்து, அதே மாதம் இராணுவத்தினர் அப்பிரதேசத்தில் பல கிராமங்களைத் தாக்கி சுமார் 100 தமிழர்கள் வரை கொன்றதாகக் கூறப்பட்டது. இவ்வாறு அடுத்து வந்த வருடங்களில் இரு சாராரும் வடக்கு கிழக்கில் ஏட்டிக்குப்போட்டியாக கிராமங்களைத் தாக்கியுள்ளனர்.


இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ், இலங்கைக்கு வந்த இந்தியப் படையினர், ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டாலும், பின்னர் அவர்களும் பல இடங்களில் கூட்டுக் கொலைகளில் ஈடுபட்டனர். 1990ஆம் ஆண்டு சாதாரண மக்கள் கூடுதலாகக் கொல்லப்பட்ட வருடமாகும். கிழக்கில் காத்தான்குடி பள்ளிவாசலில் மற்றும் ஒண்டாச்சிமடத்தில் நூற்றுக்கணக்கில் முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டனர். புலிகளே அத்தாக்குதல்களை நடத்தினர்.

1980களில் இறுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது கிளர்ச்சியின் போது, 60,000க்கும் அதிகமானோர் படையினரால் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. அக்காலத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் சூரியகந்த, கொழும்பு மாவட்டத்தில் ஹோகந்தர, கம்பஹ மாவட்டத்தில் வனவாசல போன்ற இடங்களில் புதைகுழிகளில் கூட்டாகப் பலர் புதைக்கப்பட்டுள்ளதாகப் பின்னர் தெரிய வந்தது.

இவ்வாறு பல்வேறு தரப்பினர் பல்வேறு காலங்களில் கூட்டுக் கொலைகளில் ஈடுபட்ட போதிலும், சகல கொலைகளைப் பற்றியும் கூட்டுப் புதைகுழிகள் போன்ற தடையங்கள் காணக்கூடியதாக இல்லை. அதேபோல, பதவிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் அவற்றைப் பற்றி உரிய நடவடிக்கை எடுக்கவுமில்லை.

சர்வதேச நெருக்குதல் காரணமாகப் பல அரசாங்கங்கள் காணாமற்போனோர்களைப் பற்றி ஆணைக்குழுக்களை நியமித்தன. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலங்களில் தெற்கில் 60,000க்கு அதிகமானோர் காணாமற்போனதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்வதற்கென பிரேமதாச ஆணைக்குழுவொன்றை நியமித்தார். இதனையடுத்து, வந்த ஜனாதிபதி சந்திரிகாவும் அதே விடயத்துக்காக மூன்று ஆணைக்குழுக்களை நியமித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றொன்றை நியமித்தார். குறித்த சகல ஆணைக்குழுக்களும் ஊரையும் உலகையும் ஏமாற்றம் உத்திகள் என்பது இப்போது நிரூபனமாகி விட்டது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மனித உரிமை விடயத்தில் சில சாதகமான நடவடிக்கைகளை எடுத்தார். அரசாங்கத்தின் போர் வீரர் தின வைபவங்களில் கலந்துகொள்ள அவர் ஆரம்பத்தில் விரும்பவில்லை. பின்னர் அதில் கலந்துகொண்டாலும், முன்னைய ஜனாதிபதிகளைப் போலல்லாது, அவர் நல்லிணக்கத்தை வலியுறுத்தியே அங்கு உரையாற்றினார். ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகர் செம்மணிக்குச் செல்ல அவரது அரசாங்கம் எவ்வித தடையும் விதிக்கவில்லை. ஆயினும், மனித உரிமை விடயத்தில் நிர்ணயகரமான முறையில் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதைக் காலம் தான் கூறும். ஏனெனில், அவ்வாறு நடவடிக்கை எடுக்க முற்பட்டால் பெரும்பான்மை சமூகம் அடுத்த தேர்தலில் அவரை தூக்கி எறிந்துவிடும். அவர் அந்த அபாயத்தை எதிர்கொள்ளத் தயாராவாரா என்பது காலம் போகப் போகத் தான் தெரிய வரும்.



## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனத்தை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது; ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேக சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது, ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல், திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேக சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. அத்துடன் தேவையற்ற விடயங்களையும் அசைபோடுகின்றது.

இதனால் தேகம் அல்லாடும். எனவே, மனிதன் நிம்மதியாக வாழ, புலன் அறிவைத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். நல்லதை மட்டும் உறிஞ்சும் திறனை வளர்த்திடுக..

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### உலக முடிவுக்கு செல்லும் வீதி சேதம்



சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு முக்கிய இடமான ஹோட்டன் சமவெளி பூங்கா , உலக முடிவு பகுதிக்கு வெலிமட-ஓஹிய வழியாக செல்லும் வீதி புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் சுற்றுலாப் பயணிகளும், ஓஹிய கிராம மக்களும் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

பொரலந்தவிலிருந்து ஓஹியா வரையிலான இந்த வீதி சுமார் 9 கி.மீ தூரமும், ஓஹிய ரயில் நிலையத்திலிருந்து உலக முடிவு வரையிலான 9 கி.மீ தூரமும் புனரமைக்கப்பட்ட வேண்டும் என பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

பல இடங்களில் பாதுகாப்பு வேலிகள் இல்லாததால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவை தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

– பாலித ஆரியவங்ச



# பணம் இல்லாததது வறுமையா?




டிலக்சனா விஜயகுமார்,
முதலாம் வருட மாணவி,
யாழ். பல்கலைக்கழகம்.


உலக வங்கியின் வகைப்படுத்தலின்படி, இலங்கை வறிய நாடுகளில் இருந்து நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டாலும், இன்றும் 25% - 30% சதவீதமான மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். இலங்கையில் வறுமை குறைவான மாவட்டமாக கொழும்பும் அதிக வறுமையான மாவட்டமாக மன்னாரும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் வறுமை கூடிய நாடாக புருண்டி(Burundi) (74.6%-75.8%). வறுமை குறைந்த நாடாக லக்ஸம்பேர்க் (Luxembourg) (0.5%-01%) அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன், ஆசியாவின் ஏழ்மையான நாடாக ஆப்கானிஸ்தான் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒரு நாடு அல்லது தனி ஒருவர் உண்மையில் வறுமையில் தான் இருக்கின்றாரா? என்பதை நாம் எதை வைத்துத் தீர்மானிக்கின்றோம் பணத்தைக் கொண்டா? அல்லது காணப்படும் வளங்களைப் பொறுத்ததா? வளங்கள் அதிகம் காணப்பட்டாலும் அங்குள்ள மக்கள் வறுமையில் வாடும் தேசங்களும் உண்டு. சொத்துக்கள் இருந்தும் வறுமையில் வாடும் மனிதர்களும் இருக்கின்றார்கள். உண்மையில் எமது தேசம் வளங்களினை சரியாகப் பயன்படுத்துகின்றதா? ஆப்பிரிக்காவினை போல அல்லது இந்தியாவினை போல நம் நாட்டில் நீர் பற்றாக்குறை உண்டா என்று கேட்டால் நிச்சயம் அதற்கு பதில் இல்லை என்பதுதான் நீர் வளம், வளமான நிலம் என்பவற்றினை கொண்ட அழகான தேசம் இவற்றினை சிறந்த வகையில் கையாண்டால் நாட்டின் வறுமை நீங்காமல் விட்டு விடுமா?

காலம் காலமாக மேலைத்தேய நாடுகளுக்குத் தெங்கு , இறப்பர், தேயிலை; என்பவற்றை ஏற்றுமதியும் செய்கின்றோம். என்றாலும், இன்றும் வறுமையில் வாடி பட்டினியை போக்க பிச்சை எடுப்பவர்களை நமது தேசத்தின் முக்கிய மாவட்டத்தில் காணலாம். புகையிரத நிலையங்களில் பேருந்து நிலையங்களில் ஆலயங்களில். ஆதிகாலம் தொட்டு முன்னோர்கள் முதன்முதலில் கண்டறிந்த ஜீவனோபாயங்ளுள் முதன்மையானது விவசாயம். இன்றைக்கு மேல் மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களின் மக்களின் பிரதான ஜீவனோபாயமாக காணப்படுவதும் விவசாயம் தான். மிக மோசமான தொழிலாக இன்று விவசாயத்தினை கருத வைத்துவிட்டது இன்றைய நவீன உலகம். தலைமுறைகள் கடந்து நம் எதிர்கால சந்ததியையும் நம் தாய் தேசம் வளர்க்க வேண்டும். தொழில்நுட்பத்தின் உச்சம் இன்று facebook, ஷat's up, Instagram என்று மூழ்கியும் உண்மையான வயல் தரிசாக தொலைபேசி Online விளையாட்டுக்களில் பயிர் செய்து விளையாடும் நிலையையும் நாம் கண்டுவிட்டோம். இப்படியே போனால் எதிர்கால பிள்ளைகள் உணவினையும் தொலைபேசியில் பார்த்து விட்டு வயிற்றினை பட்டினியில் கழிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

உண்மையில் எது வறுமை? பணம் இல்லாததா? நல்ல மனம் இல்லாததா? சுற்றிலும் நல் உள்ளங்கள் இல்லாததா? நல்ல காதல் இல்லாததா? நல்ல ஆடை உண்ண உணவு இல்லாததா? கல்வி இல்லாததா? அனைத்தும் வறுமை தான். இவை ஒன்றில் ஒன்று தங்கி இருக்கின்றது. ஆக, பிறந்த குழந்தை தாயை இழந்தால் அதுவும் வறுமை தான்.

இன்றைக்கு வறுமைக்கு காரணம் வறுமை ஒழிப்பிற்கு அறிமுகப்படுத்தப்படும் திட்டத்தில் ஒன்று அமுல்படுத்தி சென்றடைய முன்னர் அரசாங்கம் மாற்றம் அடைந்து இன்னொன்றினை நோக்கி கவனம் செலுத்தப்படுவதாகும். நலன்புரி திட்டங்களும் மாற்றமடைகின்றன. உண்மையான அடிப்படைத் தேவைகளைப் பெறுவதில் தீவிர பிரச்சனைகளை அனுபவிப்பவர்கள் யார்? என்பதை சரியாக இனங்காண வேண்டும். இல்லையெனில் முன்னெடுக்கும் திட்டங்கள் பயனற்று போகும். வறுமையில் பாதிக்கப்படாதவர்களைச் சென்றடையும்.

இன்றைக்கு இளைய சமுதாயத்தினர் மத்தியில் தங்கி இருக்கும் மனநிலை உண்டு. ஆம் அரசாங்கம் நமக்கு வேலை தர வேண்டும் என்று பல்கலைக்கழகத்தில் பட்டதாரிகளாக வெளிவந்த கடந்த ஐந்து ஆண்டு பட்டதாரிகள் காத்துக் கிடக்கின்றார்கள். இதுவும் அரசாங்கம் மீதான தங்கி இருக்கும் மனநிலை. நாம் கேள்விப்படாத விடயம் ஒன்றும் இல்லை இலவச வேட்டி ,இலவச சேலை தருவார்கள் என்பது போல இன்று அரசாங்க வேலைக்கு காத்துக் கிடக்கின்றோம்.

யுத்த காலத்தில் பட்டினி சாவுகள் பல கேள்விப்பட்டிருப்போம் இன்று பயிர் இல்லாமல் நம் தாய்மண் இறந்து கொண்டிருக்கின்றாள். சிறிது மாதங்களுக்கு முன் தரிசாக மக்கள் இல்லாத காணிகளாகக் கிடப்பவற்றினை அரச உடமையாக்கத் தீர்மானிக்கப்பட்டது. எதிர்ப்பின் காரணமாகப் பின்னர் நீக்கப்பட்டது.; அவ்வாறு ஒரு திட்டம் மீண்டும் வராது என்பது என்ன நிச்சயம் .அப்படி நிலை வரும்போது இங்கு வடக்கில் பயிர்செய் நிலங்கள் இன்றி தொழிற்சாலைகளையும், இராணுவ பயிற்சி முகாம்களையும், கட்டிடங்களையும் காண்போம். பயிர் செய் நிலங்கள் மறைந்தே போகும். மீண்டும் பிறப்போம் பட்டினி சாவால் யுத்தமும் இன்றி. ஏன் நான் பாதுகாப்பு இல்லாததை நாம் வறுமை என்று கூற முடியாதா? சுற்றுலாவிற்கு வரும்படி நாட்டுப் பெண்களுக்கு அதிக பாதுகாப்பான நாடாகக் கூறப்பட்ட எம் நாட்டில் தான் சிறிது மாதங்களுக்கு முன் ஒரு கர்ப்பிணித் தாயைக் கணவன் அவருடைய தலையை அறுத்தெடுத்த சம்பவம் பதிவானது . இப்படி இருக்க எப்படி சொல்லலாம் வறுமை இல்லாமல் வாழ்கின்றோம் என்று.

எங்களுடைய மனதில் உள்ள இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள யார் இருக்கின்றார்கள்? அம்மாவா! அப்பாவா! சகோதரர்களா!! ஆம் இருக்கிறார்கள். தொலைபேசியும் தொலைக்காட்சியும். சோகங்களின் போது நாம் கவலைகளை சொல்ல ஒருவர் வேண்டும். இல்லை எனில் அது ஆறாத வடுவாகும். நாம் எப்படி கவனத்தைத் திசை திருப்பலாம் என்று சிந்திக்கின்றோம். அந்த கவலைகளை வெளிக்காட்டாமல் எவ்வாறு ஓடலாம் என்று நினைக்கின்றோம். அமர்ந்து கேட்கக் கூட யாரும் இல்லை அனைவரும் சுற்றி இருந்தும் தனிமைப்பட்டுள்ளோம் . இங்கும் வறுமையின் சாயல் சற்று தெரிகின்றதோ?

ஒரு தடவை ஒரு சிறுமி தன் தாயுடன் வீதியால் செல்லும்போது ஒரு நாய் வீதியின் அடிப்பட்டு இறந்து கிடக்கின்றது. ஒரத்தில் தூக்கிப் போடவும் யாரும் இல்லை. அதனை அடக்கம் செய்யவும் நாதியில்லை. அடுத்த தடவை மீண்டும் வரும்பொழுது அவளின் தாய் மகளின் கண்களை மறைத்து திசை திருப்பி அவளை அழைத்து வருகின்றாள். மக்களின் மனதில் மனிதாபிமானம் ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றதா? இதுவும் ஒரு வகையில் வறுமைதானோ?

“என்ர மகனை கண்ணில காட்டுங்கோ” ,”என்ர அம்மாவை என்ற அப்பாவை காட்டுங்க” என்று அலறும் வழி நிறைந்த ஈழத் தமிழ் தாய் மக்களின் ஓலம் இன்னும் நின்று விடவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கண்ணில் காட்டுங்க என்பதை தாண்டி அவர்களுக்கு என்ன நடந்தது என்றாவது ஒரு வார்த்தை சொல்லுங்களேன். என்று கேட்கும் நிலையும் வந்துவிட்டது. ஆனாலும் என்ன செய்கின்றது 2016 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 14 நாட்களுக்குள் தகவல் தர வேண்டும் இருந்தும் இன்னும் கைகட்டி வாய்மூடி நிற்கின்றது. சொந்த தேசத்தில் தகவல் அறியும் உரிமையை இழந்து வறுமையை அடைந்து விட்டோம்.

ஒரு காலத்தில் பணம் இல்லாததுதான் வறுமை என்று நினைக்க வைத்து முடக்கி விட்டார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. நமக்கான உரிமை, நீதி, நிலம், அறிவு, உறவு, சுகாதாரம் போன்ற அனைத்திலும் வறுமை உண்டு. நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விடயத்தில் வறுமையில் தான் உள்ளோம். இருந்தாலும் இன்னொருவரை பார்த்து “அட அவனா அவன் பிச்சைக்காரன்” என்று சொல்ல நாம் தயங்குவதில்லை. வளர்ச்சியடைந்து அபவிருத்தி அடைந்த நாடுகள் இன்று அபிவிருத்தி அடையாத நாடுகளை முன்னேற்ற கை கொடுக்க முன்வந்துள்ளன. வெறும் பணத்தை மட்டும் அல்ல என்று போராடிக் கொண்டிருக்கும் தமிழ் உள்ளங்களுக்கு சர்வதேச நீதியையும் தர முன்வந்துள்ளன. ஒருவேளை வறுமை இல்லாமல் போய் விடுமோ..!


பணம் இருந்தால் வசதியானவன். இல்லை என்றால் வறுமையானவன். நல்ல குணம் இல்லாதவனும் உண்மையில் வறுமையில் தான் உள்ளான். நிவாரணம் வழங்குவது வறுமை ஒழிப்பிற்கு என்றால் தன் மக்களைப் பாதுகாக்க அந்நாட்டு அரசாங்கம் முன்னெடுக்கும் விழிப்புணர்வு திட்டங்களும் வறுமை ஒழிப்பு தான் நாட்டின் கடைசி குடிமகனும் வறுமை இன்றி வாழ்வானால் அந்த நாடுதான் உண்மையில் அபிவிருத்தி அடைந்த நாடாகும். வறுமை ஒழிப்பு திட்டங்கள் வறுமையால் வாடுபவர்களை சென்றடைய வேண்டும். வசதி படைத்தவர்கள் அதனை அபகரிக்க எண்ண கூடாது.



## மனநலப் பராமரிப்பை தீர்மானிக்கும் கலாசார நம்பிக்கைகள்

# ஒரு உளவியல் பார்வை



அப்சா ஹமீது,
உளவியல் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்


**“ மனநல விழிப்புணர்வை வளர்க்க, பள்ளிகள், கல்லூரிகள், ஊடகங்கள் போன்றவற்றின் பங்கு மிக முக்கியம். மாணவர்களுக்கு ஆரம்ப நிலைகளிலிருந்தே மனநலத்தின் அவசியம் பற்றிய கல்வி அளிக்கப்படும் போது, எதிர்காலத்தில் மனநலத்தின் மீது தெளிவான அணுகுமுறை கொண்ட தலைமுறை உருவாகும். இத்துடன், மனநல ஆலோசகர்கள், சமூக கலாசாரங்களை புரிந்துகொண்டு செயல்பட வேண்டியது அவசியமாகிறது**

மனநலம் என்பது ஒரு நபரின் உணர்ச்சி நிலை, சிந்தனைத் திறன், நடத்தை, மற்றும் சமூக உறவுகளைச் செம்மைப்படுத்தும் அடிப்படை அம்சமாகும். உடல் நலத்திற்குப் பெரும்பங்கு வழங்கும் சமூகம், மனநலத்தையும் அதே அளவில் உணர்வதில்லை. இன்றைய சூழலில், மனநல சிக்கல்கள் அதிகரித்துவரும் வேளையில், அவற்றை சரியான முறையில் அணுகுவதற்கும் பராமரிப்பதற்கும் சமூகத்தின் கலாசார நம்பிக்கைகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. ஒவ்வொரு சமூகத்திலும் நிலவும் பாரம்பரிய நம்பிக்கைகள், மதவாதப் பார்வைகள் மற்றும் மரபுகளே, அந்த சமுதாயத்தில் மனநல சிக்கல்களுக்கு எதிரான அணுகுமுறையை நிர்ணயிக்கின்றன.

பல சமுதாயங்களில் மனநலக் கோளாறு என்பது பாவம், தெய்வத்தால் ஏற்பட்ட சாபம், அல்லது யாரோ செய்த சூனியம் என எண்ணப்படுகிறது. இந்தக் கணக்கில், மனநல சிகிச்சை பெற வேண்டிய நபர் முதலில் ஆன்மீக வழிகளை நாடுகிறார். தெய்வ வழிபாடுகள், ஜாதக் கணிப்பு, மற்றும் நாட்டுமருந்துகள் முதலியன முதன்மையாகத் தேர்வாகின்றன. இதனால் மருத்துவ ரீதியாக சிகிச்சை பெறுவதில் தாமதம் ஏற்படுவதோடு, சில சமயம் அது முற்றிலுமாக தவிர்க்கப்படுகிறது. இது மனநலக் கோளாறுகளை மேலும் தீவிரப்படுத்தும் அபாயத்தை உருவாக்கும்.

மனநல சிகிச்சை என்பது பல சமுதாயங்களில் இன்னும் ஒரு கூச்ச வார்த்தையாகவே உள்ளது. “அவனும், அவளும் உளவியல் ஆலோசனை பெறுகிறார்கள்” என்ற ஒன்று, அவர்களைப் பைத்தியக் குறைபாடுடையவர்கள் என்ற அடையாளத்தில் முடக்கிவிடும் சமூகப் பழக்கம் நிலவுகிறது. இது மனநலத்தில் இருந்தும், சிகிச்சையிலிருந்தும் நபர்களைத் துரத்தும் சக்தியாக செயல்படுகிறது. மனநல சிக்கல்களில் சிக்கிய நபர், அதனை வெளிப்படையாக வெளிக்கொணர அஞ்சுகிறார். இதனால் அந்த நபர் தனிமையில் சிக்கிக் கொண்டு தன் நம்பிக்கையிழந்து, வாழ்க்கையை எதிர்கொள்ளும் உறுதியை இழக்கும் நிலை உருவாகிறது.

குடும்பம், நண்பர்கள், மற்றும் சமூகத்தின் பங்கு மனநலத்தில் முக்கியமானது. ஒருவர் மனநல கோளாறு அடைந்திருக்கும்போது, அவரை ஆதரிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தால், அவர் விரைவில் மீளும் வாய்ப்பு அதிகமாக இருக்கும். ஆனால் சமூக நம்பிக்கைகள், மனநலத்தைப் பற்றிய பேச்சுக்களையே தடுக்கின்றன. இது மனநல பராமரிப்பு தேவையை மறைத்துவிடும்.

உளவியல் நோக்கில் பார்க்கும் போது, ஒரு நபரின் மனநிலை என்பது தனிப்பட்ட அனுபவங்களின் மட்டுமல்லாமல், அவரைச் சுற்றியுள்ள சமூக சூழலின் தாக்கமும் ஆகும். கலாசாரமும், மொழியும், மத நம்பிக்கைகளும் ஒரு நபரின் வாழ்வியல் துறைகளில் மிகுந்த தாக்கம் ஏற்படுத்துகின்றன. எனவே, ஒரே மாதிரியான சிகிச்சை முறை அனைத்துப் பண்பாட்டிலும் பொருந்தும் என்பது தவறான எண்ணமாகும். ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டையும் மதித்து, அதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநல சிகிச்சை முறைமை அமைய வேண்டும். இது, சிகிச்சையை மக்களுக்கு அருகிலாக்கும்.

மனநல விழிப்புணர்வை வளர்க்க, பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் ஊடகங்கள் போன்றவற்றின் பங்கு மிக முக்கியம். மாணவர்களுக்கு ஆரம்ப நிலைகளிலிருந்தே மனநலத்தின் அவசியம் பற்றிய கல்வி அளிக்கப்படும் போது, எதிர்காலத்தில் மனநலத்தின் மீது தெளிவான அணுகுமுறை கொண்ட தலைமுறை உருவாகும். இத்துடன், மனநல ஆலோசகர்கள், சமூக கலாசாரங்களை புரிந்துகொண்டு செயல்பட வேண்டியது அவசியமாகிறது.

முடிவாக, கலாசார நம்பிக்கைகள் என்பவை ஒரு சமூகத்தின் அடையாளங்களைப் பிரதிபலிக்கக்கூடியவை என்றாலும், அவை மனநல பராமரிப்பில் தடையாக அமையக் கூடாது. மனநலத்தின் மீது விழிப்புணர்வையும், புரிதலையும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தால் மட்டுமே, ஒரு நலம் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். மனநலம் என்பது வெறும் தனிநபருக்கான ஒன்றல்ல, அது ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த நலத்தையும் பிரதிபலிக்கும். எனவே, மனநலத்தையும், கலாசார மரபுகளையும் இணைக்கும் பாலமாக நவீன உளவியல் அணுகுமுறைகள் செயல்பட வேண்டும்.



டாக்கா

### பங்களாதேஷ் விமான விபத்து:

# பலி எண்ணிக்கை 27ஆக அதிகரிப்பு

பங்களாதேஷ் விமானப் படையின் பயிற்சி விமானம் திங்கட்கிழமை (21) அன்று டாக்காவில் உள்ள பள்ளிக் கட்டிடத்தின் மீது மோதியதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27ஆக உயர்ந்துள்ளது.

சம்பவத்தன்று மதியம் 1.06 மணிக்கு எப்-7 பிஜிஐ பயிற்சி விமானம் புறப்பட்டு சிறிது நேரத்திலேயே பள்ளிக் கட்டிடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இயந்திர கோளாறு காரணமாக இந்த விபத்து நடந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.



இந்த விமான விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை இப்போது 27 ஆக உயர்ந்துள்ளது, அவர்களில் 25 பேர் குழந்தைகள் என்று வங்கதேசத்தின் இடைக்கால தலைவர் முகமது யூனுஸின் சிறப்பு ஆலோசகர் சைதுர் ரஹ்மான் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் சுமார் 170 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலர் ஆபத்தான நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக இன்று அரசு முறை துக்கம் அனுசரிக்கப்படும் என பங்களாதேஷ் அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து பங்களாதேஷ் அரசு வெளியிட்ட அறிக்கையில், 'நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு உதவிபெறும் அமைப்புகள், தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும். காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்களுக்காக நாட்டின் அனைத்து மத வழிபாட்டுத் தலங்களிலும் சிறப்பு பிரார்த்தனைகள் ஏற்பாடு செய்யப்படும்.

விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய வங்கதேச விமானப்படையால் உயர்மட்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது' என தெரிவித்துள்ளது.





இந்தோனேசியா

### தீப்பிடித்த சொகுசு கப்பல்

# 5 பேர் பலி; 575 பேர் மீட்பு

இந்தோனேசியாவின் சுலவேசி மாகாணத்தில் இருந்து கே.எம்.பார்சிலோனா-5 என்ற சொகுசு கப்பல் மனாடோ என்ற இடத்துக்கு அருகே சென்ற போது தீப்பிடித்துள்ளது.

தீ பிடித்து எரிந்ததால் அதில் இருந்த பயணிகள் உயிருக்குப் பயந்து கடலில் குதித்துள்ளனர்.

இது குறித்த தகவலறிந்த கடலோர பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

அப்போது மீட்பு படையினருக்கு உதவியாக உள்ளூர் மீனவர்களும் களமிறங்கியுள்ளனர்.

ஆனால், அவர்கள் அங்கு செல்வதற்குள் 5 பேர் பலியாகியுள்ளனர்.

மற்றவர்களை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டது.

280 பேர் கப்பலில் இருந்ததாக முன்னர் தகவல் வெளியான நிலையில் தற்போது மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 575 என்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதனையடுத்து மீட்பு பணி கைவிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

### பெண்களுக்கு ஆடை கட்டுப்பாடு:

# தலிபான்களுக்கு ஐ.நா. கடும் கண்டனம்

ஆப்கானிஸ்தானில் ஆடை கட்டுப்பாடுகளை மீறியதாக பெண்கள் மற்றும் சிறுமியரை தலிபான்கள் கைது செய்வதற்கு ஐ.நா. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து, அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் 2021இல் வெளியேறியதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தான் நிர்வாகத்தை தலிபான் அமைப்பு, கைப்பற்றியது.

இதனையடுத்து, அங்கு பெண்களுக்கு அங்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆறாம் வகுப்புக்கு மேல் கல்வி கற்கக்கூடாது, தங்களின் வீடுகளுக்கு வெளியே முகங்களை காட்டக் கூடாது, பொதுவெளியில் சத்தமாக பேசக்கூடாது என பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.



தலை முதல் கால் வரை மறைக்கும் வகையில், பர்தா அணிய வேண்டும் என, தலிபான் அமைப்பு உத்தரவிட்டது. இந்த உத்தரவுகளை மீறியதாக, கடந்த 16 முதல் 19 வரை தீவிர நடவடிக்கை எடுத்தது. அதன்படி, ஏராளமான பெண்கள், சிறுமியர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கு ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. 'இதுபோன்ற அடக்குமுறைகள், பெண்கள், சிறுமியர் மேலும் தங்களை தனிமைப்படுத்திக் கொள்ளவும், தைரியம் இழந்தவர்களாக மாற்றும்' என ஐ.நா., தெரிவித்துள்ளது. இந்த கட்டுப்பாடுகளை ரத்து செய்யும்படி, தலிபான் அரசை ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

சென்னை

### "மக்கள் விரும்பும்

# முதலமைச்சர் வேட்பாளர் விஜய்"

2026 தேர்தலில் தவெக மிகப்பெரிய வெற்றி பெற்று புதிய வரலாறு படைக்கும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மாநில அளவிலான கொள்கை விளக்க முதல் பொதுக்கூட்டம் திங்கட்கிழமை (21) அன்று சேலம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மைதானத்தில் நடைபெற்றுள்ளது.




இந்த பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் பேசியதாவது,

தேர்தலை கருத்தில் கொண்டு திமுகவினர் தற்போது வீடு, வீடாக சென்று மக்களுக்கு என்ன தேவை? என்பதை கேட்டு வருகிறார்கள். ஆனால் தமிழக வெற்றிக் கழகம் ஆரம்பிப்பதற்கு முன்பே நமது தொண்டர்கள் மக்களுக்கு தேவையான பல்வேறு தேவைகளை நிறைவேற்றி வருகிறார்கள். மாணவர்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பு மக்களும் விரும்பும் முதலமைச்சர் வேட்பாளராக விஜய் திகழ்கிறார். இதனால் 2026இல் நடக்கும் சட்டசபை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று முதல்-அமைச்சராக விஜய் பதவி ஏற்பது உறுதி. கட்சியின் முதல் கொள்கை விளக்க பொதுக்கூட்டம் சேலத்தில் மாபெரும் வெற்றி கூட்டமாக அமைந்துள்ளது என்று கூறினார்.




### இன்று ஆரம்பிக்கிறது நான்காவது டெஸ்ட்

# தொடரைத் தக்க வைக்குமா இந்தியா?

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டியானது மன்செஸ்டரில் இன்று புதன்கிழமை (23) பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்தும், இரண்டாவது போட்டியில் இந்தியாவும், மூன்றாவது போட்டியில் இங்கிலாந்தும் வென்றுள்ள நிலையில், தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையில் இந்தியா உள்ளது.

கடந்த போட்டியில் விளையாடிய நிதிஷ் குமார் ரெட்டி காயத்தால் தொடரிலிருந்து விலகிய நிலையில் அவரை சாய் சுதர்ஷன் அணியில் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

றிஷப் பண்ட் முழுமையாகக் குணமடையா விட்டால் சுதர்ஷனுக்கு பதில் துருவ் ஜுரேல் அணியில் இடம்பெறலாம்.

அடுத்து ஆகாஷ் டீப் உபாதைக்குள்ளாகிய நிலையில் அவரை அன்ஷுல் கம்போஜ் அணியில் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இங்கிலாந்து அணியில் ஷொய்ப் பஷிரை லியம் டோஸன் பிரதியிட்ட நிலையில் அவ்வணியின் பின்வரிசை மேலும் பலமாகிறது. குஸ் அட்கின்ஸனை உடனே அணியில் கொண்டு வரா விட்டாலும் கிறிஸ் வோக்ஸ் தன்னை நிரூபித்துக் காட்ட வேண்டியவராகக் காணப்படுகிறார்.

# பூப்பந்தாட்டத்தில் பிரகாசித்த கல்முனை சாஹிரா










எம்.எஸ்.எம்.ஸாகிர்


கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக் கிடையில் நடைபெற்ற பூப்பந்தாட்டத்தில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 20 வயதுக்குட்பட்டோர் சம்பியனாகி தேசிய மட்டத்துக்குத் தெரிவாகினர்.

அத்துடன், சாஹிராவின் 18 வயதுக்குட்பட்டோர், 16 வயதுக்குட்பட்டோர் 2ஆம் இடங்களைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகினர்.

சாதித்த மாணவரை வழிப்படுத்தி பயிற்றுவித்த ஆசிரியர்களான ஏ.எம். அப்ராஜ் றிழா, எம்.எச்.எம். முதன்ஸிர் ஆகியோருக்கு மாகாண மட்டத்தில் சிறப்பாக விளையாடியது போன்று தேசிய மட்டத்திலும் வெற்றிபெற வேண்டுமென கல்லூரியின் அதிபர் எம்.ஐ.ஜாபீர் உட்பட பிரதி அதிபர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் சார்பான பாடசாலை சமூகம் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தனர்.


# மீள்வருகையை வெற்றியுடன் தொடக்கினார் வீனஸ்

முபடலா சிட்டி டி.சி பகிரங்க டென்னிஸ் தொடரில் திங்கட்கிழமை(21) நடைபெற்ற முதலாவது சுற்று இரட்டையர் போட்டியில் சக ஐக்கிய அமெரிக்க வீராங்கனையான ஹேஸி பப்டிஸுடன் இணைந்து கனடாவின் யூஷனி பூச்சார்ட், ஐக்கிய அமெரிக்காவின் கிளெர்வி இகுனேய் இணையை 6-3, 6-1 என்ற நேர் செட்களில் வீழ்த்தி வெற்றியுடன் 45 வயதான வீனஸ் வில்லியம்ஸ் டென்னிஸுக்கு மீண்டும் திரும்பியுள்ளார்.



இறுதியாக இதற்கு முன்னர் கடந்த 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் மியாமி பகிரங்கத் தொடரிலேயே ஐக்கிய அமெரிக்காவின் வீனஸ் விளையாடியிருந்தார்.

# அத்லெட்டிகோ செல்லும் அந்தனி?




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான அந்தனியைக் கைச்சாத்திடுவதற்கான போட்டியில் ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் முன்னிலையிலுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த பருவகாலத்தில் இன்னொரு லா லிகா கழகமான றியல் பெட்டிஸில் கடனடிப்படையில் 25 வயதான அந்தனிஸ் விளையாடியிருந்த நிலையில், நிரந்தரமாக அக்கழகத்தில் விளையாட விரும்புகின்றார்.

எனினும், நிதிக் கட்டுப்பாடுகளால் தடுமாறும் பெட்டிஸ், அந்தனியைக் கைச்சாத்திடுவதற்குத் தேவையான 35 மில்லியன் யூரோக்களை புரட்ட முடியாமலுள்ளது.

### மாகாண மட்ட தடைதாண்டலில்

# இரண்டாமிடம் பெற்ற நாதீக்குக்கு பாராட்டு



நூருல் ஹுதா உமர்

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலயத்தைச் சேர்ந்த டீ. நாதீக் தடை தாண்டலில் மாகாணத்தில் இரண்டாமிடத்தைப் பெற்ற நிலையில் அவரைப் பாராட்டி கௌரவிக்கும் விசேட காலை ஆராதனை பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் திங்கட்கிழமை(21) அன்று நடைபெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 23, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.